**+2 வணிகவியல் முதல்திருப்பத் தேர்வு ஜன - 25**

**சரியான விடை**

1. (ஆ) குறைவு
2. (ஈ)அமைப்பின் குறிக்கோள்களை வரையறுப்பது
3. (ஆ) 1992
4. (இ) குறைந்த இலாபத்தன்மை
5. (ஆ) தனது சொந்த நடவடிக்கைகளுக்காக
6. (இ) டிசம்பர் 1996
7. (அ) வேலை தேடுபவர் மற்றும் வேலை வழங்குநர்
8. (இ) தொழிற்சாலைக்கு வெளியே
9. (ஆ) சமுக வகுப்பு
10. (அ) உயர்நீதி மன்றத்தின் நீதிபதி
11. (அ) மதிப்பு நிச்சயமின்மை சிக்கலானது தெளிவில்லாதது
12. (ஆ) 1991
13. (ஆ) வரவேண்டிய பங்காதாயம்
14. (ஆ) தொழில் துவக்கும் மற்றும் வளர்க்கும் தொழில் முனைவு
15. (ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
16. (ஈ) தோற்றுவிப்பாளர்
17. (ஆ) ii iv iii i
18. (இ) 20 நிறுமம்
19. (ஆ) உற்பத்திச் சந்தை
20. (ஈ) மேலே ஏதுவும் இல்லை

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. அதிகாரம்** என்பது ஒரு அலுவலர் தன் கீழ் பணியாளர்களுக்கு ஆணையிடும் உரிமையைக் குறிக்கிறது.

**22. OTCEI சிறு குறிப்பு தருக.** பங்குகளை இந்தியா முழுவதும் மின்னணு மூலம் வியாபாரம் செய்யும் நோக்கத்தோடு முதன்மை நிதி நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதே OTCEI என்பதாகும்.

**23. தரகர்:** பத்திரங்களை வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இடைநிலையாளர்களாக செயல்படுபவர் தரகர்கள் எனப்படுவார். இவர்கள் தனக்காகப் பத்திரங்களை வாங்கி விற்பதில்லை. இதற்காக கழிவு பெறுவார்.

**24. வேட்டையாடுதல்:** போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு நிதி மற்றும் நிதிசாராத சலுகைகளை கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துவது வேட்டையாடுதல் ஆகும

**25. சந்தையிடுகையாளர் வரைவிலணக்கம். தொழில் அகராதியின்** கூற்றுப்படி "யார் ஒருவர் ஒரு குறிப்பிட்ட நுகர்வோருக்கான பண்டங்கள் மற்றும் பணிகளின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் நிறுவனங்கள் சார்பாக பண்டங்கள் மற்றும் பணிகளை சந்தையிடுகை செய்கிறாரோ அவரே சந்தையிடுகையாளர்" ஆவார்.

**26. தனியார்மயமாக்கல்:** பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை தனியார் துறைக்கு மாற்ற அனுமதி அளிப்பதாகும்.

**27. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகள்:** மாற்றுச்சீட்டு எழுத்து வடிவில் இருக்க வேண்டும். மாற்றுச்சீட்டை விடுநர் அல்லது எழுதுபவர் கையொப்பம்இடவேண்டும்.பணம் யாருக்கு செலுத்தப்படவேண்டும் என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

**28. வேளாண் தொழில் முனைவோர்:** வேளாண் பொருட்களை விளைவித்து நேரடியாகவோ அல்லது கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவும் சந்தையிடும் பணியை மேற்கொள்பவர் ஆவர்.

**29. மேலாண்மையில் முக்கிய நபர்களை எவ்விதமான கம்பெனிகள் நியமனம் செய்திருக்க வேண்டும்?** ஒவ்வொரு பட்டியலிடப்பட்ட நிறுமம் ரூ.10 கோடி அதற்கு மேல் பங்குமுதல் கொண்டுள்ள ஒவ்வொருபொது நிறுமம்.

**30.நுகர்வோரியல்** என்பது விற்பனையாளர்களுடனான உறவுகளில் வாங்குபவர்களின் உரிமைகள் மற்றும் அதிகாரங்களை மேம்படுத்தும் முயற்சியாகும்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக.** திட்டமிடல், அமைப்பாற்றல், பணியமர்த்தல், இயக்குவித்தல், செயலூக்கமளித்தல், கட்டுப்படுத்துதல், ஒருங்கிணைத்தல்

**32. பணச் சந்தையில் ஈடுபடும் பங்கேற்பாளர்கள்** பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள், பல்வேறு நாடுகளின் மைய வங்கிகள், தனியார் மற்றும் பொதுத் துறை வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், வணிக வங்கிகள், மாநில அரசுகள், பொது மக்கள், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பாரத ஸ்டேட் வங்கிகள்.

33.



**34. சந்தையிடுகையின் கருத்துக்கள்:-** நாட்டின் வருமானத்தை உயர்த்த வழிவகை செய்கிறது. வேலைவாய்ப்புகளை அதிகரிக்கிறது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**35. தேசிய ஆணையத்தின் உறுப்பினர்கள்**
5 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.
அவர்களில் ஒருவர் நீதித்துறையை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
ஏனைய நபர்கள் பிற துறைகளில் இருக்க வேண்டும்.
இவ்வமைப்பில் பெண் உறுப்பினர் இருக்க வேண்டும்.

**36. தொழில் நுட்ப சூழல்:** கடந்த காலங்களில் தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சி அனைத்து வியாபாரத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பின் வளர்ச்சி உலகளவில் சந்தைகளில் உருவாக்கியுள்ளது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நுகர்வோரின் தேவையைக் கண்டறிய முடிகிறது.

| 37. அடிப்படை | தொழில் முனைவோர் | மேலாளர் |
|---|---|---|
| நோக்கு | தொழிலை தொடங்குபவர் | தொழிலில் பணிபுரிபவர் |
| தகுநிலை | உரிமையாளர் | உழைப்பாளி |
| வெகுமதி | இலாபம் பெறுபவர் | ஊதியம் பெறுபவர் |

**38. சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளைத் தருக.**
நிறுமம் தனது பெயரைத் திருத்த, இயக்குநர்களைப் பணியமர்த்த, நிறுமப் பங்கு முதலை மாற்றியமைக்க.

**39. விலை செலுத்தப்பெறா வணிகர்:** விற்ற பொருளின் விலை முழுவதும் செலுத்தப்படாவிட்டாலும் அல்லது விற்ற பொருளுக்ககாக வாங்குனர் கொடுத்த காசோலை அல்லது மாற்றுச்சீட்டு அவமதிக்கப்படும்போது விற்றவர் விலைபெறாத விற்குநராகக் கருதப்படுகிறார்.

**40.** ஒரு குழுவினர் விண்ணப்பதாரரை நேர்காணல் செய்யும் இடம். இது **குழுநேர்காணல்** என அழைக்கப்படுகிறது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ. நவீன மேலாண்மைக் கோட்பாடுகளை விவரி**
**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.
**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.
**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.
**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.
**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

**41.ஆ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக**
**இரு தரப்பினர்:-** விற்பனை ஒப்பந்தத்தில் வாங்குபவர் மற்றும் விற்பவர் உள்ளனர்.
**பொருளின் மீதான உரிமை மாற்றம்:-** விற்பவர் பொருளின் மீதான உரிமையை மறுபயன் பெற்றுக் கொண்டு மாற்றித் தர வேண்டும்.
**சரக்கு:-** அசையும் சொத்துக்கள் அனைத்தும் சரக்கு ஆகும். (எகா:-. பங்குகள், நற்பெயர்)
**விலை:-** பொருளின் விற்பனைக்கான மறுபயனே விலை ஆகும்.
**விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு:-** பொருட்களின் உரிமை உடனே மாற்றினால் அது விற்பனையாகும். பொருட்களின் உரிமையை எதிர்காலத்தில் மாற்றுவது விற்பனை உடன்பாடாகும்.

| 42. அ. அடிப்படை | முதல்நிலைச் சந்தை | இரண்டாம் நிலைச் சந்தை |
|---|---|---|
| பொருள் | புதிய பங்குகளுக்கான சந்தை | முன்னரே வெளியிட்ட பங்குகளுக்கான சந்தை |
| கொள்முதல் | நேரடி | மறைமுகம் |
| விற்கும் முறை | ஒரு முறை | பல முறை |
| ஆதாயம் பெறுபவர் | நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| விலை | நிலையான விலை | தேவை அளிப்பை பொறுத்து மாறும் |

**42.ஆ) புதிய தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காக படிநிலைகளை விளக்குக.**
**பொருள்தேர்வு:-** எதிர்பார்ப்பு திறன், உள்நோக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு தயாரிப்பு ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம்.
**இடத்தேர்வு:-** தொழில் முனைவோர் தனக்கு பொருத்தமான தொழில் இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.
**மூலதனகட்டமைப்பை தீர்மானித்தல்:-**சொந்தசேமிப்பு மற்றும் கடன்கள்மூலம் மூலதனத்தை திரட்ட முடியும்.
**நிரந்தரபதிவு சான்றுபெறுதல்:-**உற்பத்தி தொடங்கி தயாரானவுடன் நிரந்தர பதிவு சான்றிதழ் பெற முடியும்.
**சட்டபூர்வ உரிமை:-** நகராட்சி சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பெற வேண்டும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

| 43.அ. சிறப்பியல்புகள் | பங்கு பரிவர்த்தனை (பங்குச் சந்தை) | பண்டமாற்று பரிவர்த்தனை (பொருட்கள் பரிமாற்றம்) |
|---|---|---|
| பொருள் | பத்திரங்களை வாங்குதல் மற்றும் விற்றல் | பண்டங்கள் வர்த்தகம் செய்யப்படும். |
| பணிகள் | சந்தைப்படுத்துதலை எளிதாக்குகிறது | நீர்மைத் தன்மையை ஏற்படுத்துதல். |
| நோக்கம் | மூலதன உருவாக்கம் | மூலப்பொருள் விற்பனையை அதிகரித்தல். |
| பங்கேற்பாளர்கள் | முதலீட்டாளர்கள் மற்றும் ஊக வணிகர்கள் | தயாரிப்பாளர்கள், முகவர்கள், வியாபாரிகள் மற்றும் ஊக வணிகர்கள். |
| ஒப்பந்தங்களின் காலம் | பதினைந்து நாட்கள் | 2 அல்லது 3 மாதங்கள். |

**43.ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்?**

**அதிகவிலைக்கு விற்றல்:-** பொருளின் விலையைவிட கூடுதலானவிலையில் விற்று நுகர்வோரை ஏமாற்றுகின்றனர்.

**கலப்படம்:-** உணவுப் பொருட்களில் உடலுக்கு கேடு செய்யும் பொருட்களை இலாபத்துக்கு ஆசைப்பட்டு கலப்படம் செய்கின்றனர்.

**போலியான பொருட்கள்:-** மக்கள் மத்தியில் பிரபலமாக உள்ள பொருட்களை போலியாக செய்து விற்று நுகர்வோர்களை ஏமாற்றுகின்றனர்.

**செயற்கை பற்றாக்குறை:-** வியாபாரிகள் பொருட்களை இருப்பு வைத்துக் கொண்டு இருப்பு இல்லை என செயற்கைப் பற்றாக்குறையை ஏற்படுத்தி இலாபம் ஈட்டுகின்றனர்.

**தரக்குறைவு:-** கட்டுமானம் செய்து விற்கப்படும் பொருட்களைத் திறந்து பார்த்தால் பல சமயங்களில் தரம் குறைந்த பொருட்களே இருக்கும்.

**44.அ. விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள்**

மேலாளர்களின் நேரத்தை சேமிக்கிறது.

முக்கியப் பிரச்சனைகளை நிர்வகிப்பதில் கவனங்களைச் செலுத்துகிறது.

அதிகாரப் பகிர்வினை எளிமையாக்கி, ஊக்குவித்து வளர்ச்சியடைய வழிவகுக்கிறது.

முக்கியமான சிக்கல்களைக் கண்டறிவதன் மூலம் எச்சரிக்கையாக இருக்க உதவுகிறது.

முடிவுகளை நிர்ணயிக்கும் சிறந்த அளவுகோலாக விளங்குகிறது.

**44.ஆ. தாராளமயமாக்கலின் நன்மைகள்**

தாராளமயமாக்கலின் மூலம் வெளிநாட்டு முதலீடு அதிகரிக்கிறது.

அந்நிய செலவாணி மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்தி அந்நியச் செலவாணியின் இருப்பை அதிகப்படுத்துகிறது.

ஒரு நாட்டின் அளவுக்கு அதிகமான உற்பத்திக்கும் நுகர்வுக்கும் வழிவகை செய்கிறது.

ஏற்றுமதி, இறக்குமதி தீர்வைகளை நீக்குவதன் மூலம் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கிறது.

உலகமயமாக்கலினால் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் வர்த்தக கடனின் அளவு குறைகிறது.

**குறைபாடுகள்:-** தாராளமயமாக்கலினால் சிலதொழிற்சாலைகள் மூடப்படுவதால் வேலையில்லாப்பிரச்சனை அதிகரிக்கிறது.

உள்நாட்டு உற்பத்தி தொழில்கள் பாதிக்கிறது.

ஒரு நாடு மற்ற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலையை அதிகரிக்கிறது.

தாராளமயமாக்கலினால் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டும் அதிகப் பயன் கிடைக்கிறது. வளரும் நாடுகளின் பொருளாதாரம் பின்தங்கியே இருக்கிறது.

**45.அ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள சமீபகால போக்குகளை விளக்குக.**

**புறத்திறனீட்டல்:-** ஆட்சேர்ப்பு பணியினை மேற்கொள்ள சேவைக்கட்டணம் வழங்கும் நிறுவனங்களின் விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்து சரியான பணிக்கு சரியான நபரை தேர்ந்தெடுத்து கொடுக்கும் பணியினை புறத்திறனீட்டல் நிறுவனங்கள் செய்கின்றன.

**புறம்பான திறன் மற்றும் ஆற்றல் கொண்ட நபரை வேட்டையாடுவது:-** நிறுவனங்கள் தங்களது சொந்த பணியாளர்களுக்கு பயிற்சி மற்றும் மேம்பாடுகள் வழங்குவதற்கு பதிலாக போட்டி நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு நிதி மற்றும் நிதிசாராத சலுகைகளை கூடுதலாக வழங்கி அப்பணியாளர்களை கவர்ந்து பணியில் அமர்த்துகிறது. இது கவர்தல் என்றும் அழைக்கப்படுகிறது. அல்லது திறமையானவர்களை வேட்டையாடுதல் எனப்படுகிறது

**45.ஆ) பலவகையான திறந்த மற்றும் இரகசிய வகையில் செய்யப்படும் வாக்கெடுப்பு முறைகள்:**

**திறந்த நடைமுறை:-** இம்முறையில் வாக்கெடுப்பில் ஒளிவு மறைவு இல்லை. வாக்களிப்பு அனைவருக்கும் தெரியும் விதத்தில் அமையும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**குரல் வாக்கெடுப்பு:-** பிரபலமான முறை “ஆம்” “இல்லை” என குரலை உயர்த்திக் கூற வேண்டும். வாக்கு எண்ணப்படுவது இல்லை.

**கைகளை உயர்த்துவதன் மூலம் வாக்கெடுப்பு:-** கையை உயர்த்திச் சொல்லி ஆதரவு வாக்கெடுப்பு நடைபெறும். பின்னர் முடிவை எண்ணிக்கை அடிப்படையில் தலைவர் வெளியிடுவர்.

**இரகசிய வாக்கெடுப்பு முறை:-** மற்றவர்களுக்கு தெரியாதவாறு ரகசிய வாக்கெடுப்பு நடைபெறும்.

**வகைகள்:- வாக்குச் சீட்டு முறை:-** வரிசை எண் இடப்பட்ட வாக்குச் சீட்டு பயன்படுத்தப்பட்டு வாக்கெடுப்பு இரகசிய முறையில் நடைபெறும்.

**அஞ்சல் வாக்கு முறை:-** அஞ்சல் மூலம் உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளைப் பதிவு செய்து அனுப்பும் முறையாகும்.

**46.அ) பணச்சந்தையின் சிறப்பியல்புகளை விவரி**

**குறுகிய கால நிதிகள்:-** பணத்திற்கு நிகரான நிதி சொத்துக்களுக்கான சந்தை.

**முதிர்வு காலம்**:- ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்வு காலம் கொண்டது.

**பணமாக மாற்றுதல்:-**உடனடியான பணமாக மாற்றும் நிதிச் சொத்துக்களை மட்டுமே பரிமாற்றம் செய்யும்.

**முறையான இடமில்லை:-** பரிவர்த்தனைகள் தொலைபேசி அதாவது வாய்மொழி தொடர்பு மூலமாக நடைபெறும். ஒரு முறையான இடமில்லை.

**மொத்த விற்பனை:-** பணச் சந்தையின் முக்கிய நிதி வழங்கும் மையம் வணிக வங்கியாகும். இது ஒரு மொத்த விற்பனை சந்தையாகும்.

**46ஆ) பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?**

**முறையான (செம்மையான சந்தை):-** இவ்வகை சந்தையில் ஒரே தன்மைக் கொண்ட பண்டங்கள் மற்றும் பணிகளை ஒரே விதமான விலையில் கையாளப்படுகிறது.

**முறையற்ற அல்லது செம்மையற்ற சந்தை:-** இவ்வகை சந்தை பல்வகைப் பொருட்கள் மற்றும் பல்வேறு விலைகளை கொண்டுள்ளது. ஒரே தன்மை மற்றும் விலை கொண்ட பொருட்கள் இச்சந்தையில் இடம் பெறாது.

**47.அ. பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான முக்கியமான நேர்காணலின் வகைகள்:**

**ஆரம்ப நேர்காணல்:-** விண்ணப்பதாரர்களின் குறிப்பிட்ட பணிக்கான பொருத்தத்தை அறிய ஆரம்ப நேர்காணல் நடத்தப்படுகிறது.

**வடிவமைக்கப்பட்ட நேர்காணல்:-** நேர்காணலில் கேள்விகள் முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் நடத்தப்படுவது.

**வடிவமைக்கப்படாத நேர்காணல்:-** சுதந்திரமான மற்றும் வெளிப்படையான கருத்து பரிமாற்றம் இருக்க வேண்டும். இது முன்கூட்டி திட்டமிடப்படுவதில்லை.

**மனஅழுத்த நேர்காணல்:-** மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை சோதிக்க இத்தகைய நேர்காணல் நடத்தப்படுகிறது.

**தொலைபேசி நேர்காணல்:-** விண்ணப்பித்தவர்களின் விவரங்களை தொலைபேசி வழியாகவே அறியப்பட்டு தேவையற்றவர்கள் ஆரம்பத்திலேயே நீக்கப்படுகின்றனர்

**47.ஆ. மகளிர் தொழில் முனைவோர் சந்திக்கும் பிரச்சனைகளை விவாதிக்க.**

**நிதிப்பிரச்சனை:-** மகளிர் தொழில் முனைவோர்களுக்கு தங்களின் தொழிலில் ஏற்படும் நிதிப்பற்றாக்குறையை சமாளிப்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது.

**ஆதரவு இன்மை:-** கணவன், பிள்ளைகள், பெற்றோர்கள், நண்பர்கள் அருகில் வசிப்பவர்கள் என பலரின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

**கடும் போட்டி:-** மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் கடுமையான போட்டியை எதிர் கொள்கின்றனர்.

**கல்வியறிவு இன்மை:-** குறைவாக படித்துள்ள மகளிர் தொழில் முனைவோர்கள் தொழில் தொடர்பான கருத்துக்களை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியவில்லை.

**சார்ந்து வாழும் கலாச்சாரம்:-** பல சம்பவங்களில் மகளிர் தன் வாழ்நாள் முழுவதும் நம் நாட்டில் பிறரை சார்ந்து வாழ்ந்து வருகின்றனர்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com